பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 09 2025 SUNDAY 7.15 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்பு திருவிழா நாளை தொடங்குவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. வேளாண் பொருட்களின் ஏற்றுமதியை இரண்டு மடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சர்வதேச அணுசக்தி முகமை உடனான ஒத்துழைப்பை நிறுத்தி வைப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

5. ஆசிய சாப்ட் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா, இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் பயனடைவார்கள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டு மக்களிடையே உரையாற்றுகையில் இதனை தெரிவித்த அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாளை முதல் செயல்பாட்டிற்கு வரும் இந்த சீர்திருத்தம் மூலம், சரக்கு மற்றும் சேவை வரி 5 மற்றும் 18 சதவீதம் என்ற இரண்டு அடுக்காக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்பு திருவிழா நாளை தொடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைவார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

சுயசார்பு இந்தியா நாட்டின் வளத்திற்கு வலுசேர்க்கும் என்று குறிப்பிட்ட அவர், இதனை கருத்தில் கொண்டு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே பொதுமக்கள் வாங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு அனைத்து மாநில அரசுகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்துறையின் நிதி ஒதுக்கீடு கடந்த 11 ஆண்டுகளில் 338 கோடி ரூபாயிலிருந்து ஆயிரத்து 313 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் எந்தவொரு சிரமத்தையும் எதிர்கொள்ளக்கூடாது என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் 35 சர்வதேச விமான நிலையங்கள் உடபட 90 விமான நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வேளாண் பொருட்களின் ஏற்றுமதியை அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அரிசி மாநாடு வரும் 30 ஆம் தேதி, புதுதில்லியில் தொடங்கவுள்ளதை ஒட்டி விடுத்துள்ள காணொலிச் செய்தியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிற நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது, விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் திரு. பியூஷ் கோயல் திட்டவட்டமாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்து வரும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று மத்திய அமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருந்தால், நீதிமன்றத்தை நாடாமல் இருப்பது ஏன் என்றும் வினவினார்.

ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையம் பலமுறை அறிவுறுத்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், ஆதாரங்களை சமர்ப்பிக்காமல் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவது அர்த்தமற்றது என்றும் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

சர்வதேச *Alzheimer* தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நினைவாற்றலை பாதிக்கும் இந்த நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா விடுத்துள்ள செய்தியில், இந்த நோயை குறித்த காலத்தில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் பாதிப்பை குறைக்க இயலும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோய் தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

பாதுகாப்புத்துறை மருத்துவ சேவையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என இந்தியாவும் அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன.

இதுதொடர்பாக, இருநாடுகளின் பாதுகாப்புப் படை மருத்துவ சேவை அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்கள், Honolulu மற்றும் Hawaii-ல் நடைபெற்றன.

அங்குள்ள பாதுகாப்புப் படைக்கான மருத்துவ வசதிகளையும் இந்திய குழுவினர் பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

H-1B விசா கட்டண உயர்வு தொடர்பாக, இந்தியர்களுக்கு உதவும் வகையில் அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகம் உதவி மையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கட்டண உயர்வு காரணமாக, உடனடி உதவி தேவைப்படும் இந்தியர்கள் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண்களையும் வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

சர்வதேச அணுசக்தி முகமை உடனான ஒத்துழைப்பை நிறுத்தி வைப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

*அணுசக்தி ஒப்பந்தத்திற்கான நிவாரணத்தை வழங்க ஐ.நா. பாதுகாப்புக் குழு தவறியதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியின் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*அமெரிக்காவில் நேரிட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார், பலர் காயமடைந்தனர்.*

*New Hampshire மாகாணத்திற்கு உட்பட்ட Nashua-வில் உள்ள விடுதி ஒன்றில் இந்த சம்பவம் நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*>>>>>><<<<<<*

*பாகிஸ்தானில் கல்வி நிறுவன கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில், 6 குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.*

*பஞ்சாப் மாகாணத்திற்கு உட்பட்ட Hafizabad-ல் செயல்பட்டு வந்த இந்த பள்ளியின் மேற்கூரை இடிந்து விழுந்தது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*சர்வதேச அமைதி தினம் இன்று கடைபிடிக்கப்பட்டதை ஒட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*இந்நாளையொட்டி, நாகாலாந்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. Neiphiu Rio, உலகின் அமைதிக்காக அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*>>>>>><<<<<<*

*மிஸோரம் மாநிலத்தில் ஊட்டச்சத்து மாதம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*ஆண்கள் கூடுதலாக பங்கேற்க வகைசெய்யும் வகையில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.*

*குழந்தைகள் ஊட்டச்சத்தை பராமரிப்பதில் ஆண்களுக்கும் பங்கு உண்டு என்பதை கருத்தில் கொண்டு இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*மஹாராஷ்ட்ராவில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரண உதவி வழங்குவதற்காக 689 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில அமைச்சர் திரு. Makarand Jadhav Patel அறிவித்துள்ளார்.*

*மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*முழுமையான ஆய்வறிக்கை கிடைத்தவுடன் முழுமையான நிதி ஒதுக்கப்படும் என்றும் திரு. Makarand Jadhav Patel கூறினார்.*

*>>>>>><<<<<<*

*ஆசிய Soft Tennis சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*கொரியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் மற்றும் கலப்புக் குழு பிரிவுகளில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.*

-----------

*ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.*

>>>>>><<<<<<

*ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*பிரிஸ்பனில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 225 ரன் எடுத்தது.*

*அதிகபட்சமாக Tom Hogan 41 ரன் எடுத்தார்.*

*Henil Patel அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.*

*226 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த இந்தியா 30 புள்ளி மூன்று ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 227 ரன் எடுத்து, வெற்றிபெற்றது.*

*Abhigyan Kundu அபாரமாக ஆடி 74 பந்துகளில் 87 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.*

*மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் வரும் புதன்கிழமை நடைபெறுகிறது.*

>>>>>><<<<<<

*ஜார்ஜியாவின் Batumi-யில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankolika Chakraborty அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் 10-12, 11-2, 11-8, 11-3 என்ற செட்கணக்கில் பல்கேரியாவின் Hristina Davidova-வை வென்றார்.*

*இதர மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் Shriya Anand, Prisha Goel மற்றும் Tushti Sood வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்.*

*>>>>>><<<<<<*

*சீனா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 3 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் பிரமோத்தும், மகளிர் ஒற்றையர் பிரிவில் நித்யஸ்ரீ-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*ஆடவர் இரட்டையர் பிரிவில் ஜெகதீஷ் - நவீன் இணையும், Ruthick Ragupathi – மலேசியாவின் Cheah Liek Hou இணையும் தங்கப்பதக்கம் வென்றன.*

*ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரமோத் – சுகந்த் இணையும், ஒற்றையர் பிரிவில் கிருஷ்ணா மற்றும் சுகந்த்தும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.*

*ஆடவர் இரட்டையர் பிரிவில் Prem – Abu இணையும், உமேஷ் – சூர்யா இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் கிருஷ்ணாநாகர் – நித்யஸ்ரீ இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் நவீன் மற்றும் உமேஷ்-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

*>>>>>>END<<<<<<*